1986 நவம்பர் 21] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1972-73-ஆம் ஆண்டிற்கான முன்னறிக்கைமீது பொதுக் கணக்குக் குழு அளித்த இரண்டாவது அறிக்கையில் (ஆறாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பத்தாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் மூன்றாவது அறிக்கையில் (எட்டாவது பேரவை) அளித்துள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை.

(ஆ) புதுப் பணித் திட்டம் நிதி ஒதுக்கத்திற்கு மேல் செலவாகியுள்ள புதுப் பணித் திட்டங்கள் பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தொன்பதாவது அறிக்கை.

(இ) மிகைச் செலவை முறைப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம் குறித்துப் பொதுக் கணக்குக் குழு (1983-84) அளித்த 25-ஆம் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைபற்றிய மேற்படி குழுவின் நாற்பதாவது அறிக்கை.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை, குழுத் தலைவரின் சார்பாக திருமதி பா. வளர்மதி அவர்கள் அவைக்கு அளிப்பார்கள்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையை பொது நிறுவனங்கள் குழுத் தலைவரின் சார்பாக நான் அவைக்கு அளிக்கிறேன்.

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976-77 மற்றும் 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1980-82) பதினைந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைபற்றிய மேற்படி குழுவின் முப்பத்தி ஐந்தாவது அறிக்கை.

(முற்பகல் 10-40.)

(இ) அரசு உறுதி மொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதி மொழிக் குழுவின் அறிக்கையை அக்குழுத் தலைவரின் சார்பாக திரு. பொ. உத்திராபதி அவர்கள் அவைக்கு அளிப்பார்கள்.